ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1785/35 - 2012 නොවැම්බර් 23 වැනි සිකුරාදා - 2012.11.23
*1785/35 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

2012 ஆம் ஆண்டின் 287 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல. : 03ஜே/82/ஈ/342.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : ஜே/டீஎஸ்/எல்ஏ/1758.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2012.11.09.

அட்டவணை

1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்: பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்.

2. காணியின் விபரம் : வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில், யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட வட்டார இல. 7- பாசையூர் வட்டாரத்தில்,பாசையூர் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 1984.04.26 ஆந் திகதிய யா. 1764 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட சுமார் 0.0374 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

**01. துண்டு இல. 1 - புனித அந்தோனியார் கோயில் வளவு - விஸ்தீரணம் : சுமார் 0.0374 ஹெக்டயார்**

வடக்கு : யா/பாசையூர் புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி உரிமை கோரும் காணி, புனித அந்தோனியார் வீதியில் வரி மதிப்பீட்டு இல. 46 மற்றும் புனித அந்தோனியார் வீதி ; கிழக்கு : குருவித் தோட்டம், புனித அந்தோனியார் வீதியில் வரி மதிப்பீட்டு இல. 46/2, கப்ரியெல் ஜோன் செபஸ்தியம் பிள்ளையும் யா/பாசையூர் புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியும் உரிமை கோரும் காணி மற்றும் புனித அந்தோனியார் வீதியில் வரி மதிப்பீட்டு இல. 46 ; தெற்கு : புனித அந்தோனியார் ஆலயம், புனித அந்தோனியார் வீதியில் வரி மதிப்பீட்டு இல. 60, குருவித் தோட்டம், வரி மதிப்பீட்டு இல. 46/2, கப்ரியெல் ஜோன் செபஸ்தியம் பிள்ளை உரிமை கோரும் காணி ; மேற்கு : புனித அந்தோனியார் வீதி.

12-200

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.